ழ் முரசு
TAMIL MURASU
VOICE OF THE COMMUNITY
வியாழன் 17 12 2009




# இந்தியாவின் பெரும் வளர்ச்சிக்கு மதியுரை அமைச்சர் லீ யோசனை

*நிர்வாக தாமதங்கள் அகலவேண்டும், *தொழில்முனைவர்கள் பெருகவேண்டும் *அடிப்படை வசதிகள் மேம்பட வேண்டும்




இந்தியாவின் டாடா குழுமத்தின தலைவர் ரத்தன் டாடாவுடன் புதுடெல்லியில் சிங்கப்பூர்க் கருத்தரங்கில் சிங்கப்பூரின் மதியுரை அமைச்சர் உரையாடுகிறார். ஏஎப்பி

**புதுடெல்லியில் இருந்து தமிழவேல்**

இந்தியா தனது நிர்வாகத் தாமதங்களை அகற்றி, தொழில் முனைவர்களை வளரவிட்டு, முறையான அடித்தள அமைப்புகளை மேம்படுத்தினால் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் எண்ணிக்கை பெருகி 100 மில்லியனுக்கும் மேலான வேலை வாய்ப்புகள் உருவாகும் என மதியுரை அமைச்சர் லீ குவான் இயூ கூறினார்.

போக்குவரத்து, தகவல் துறைகளை மேம்படுத்தினால் இன்னும் அதிகமான பொருளியல் வளார்ச்சியை இந்தியா பெறும் என நம்புவதாகவும் அவர் கருத்துரைத்தார்.

மேலும் அண்மையில் உலகை உலுக்கிய பொருளியல் நெருக்கடியால் ஆசியா அதிக பாதிப்படையாமல் இருந்ததற்கு இந்தியாவும் சீனாவும்தான் காரணம் என்று அவர் சொன்னார்.

இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் நேற்று நடந்த சிங்கப்பூர் கருத்தரங்கில் திரு லீ கலந்து கொண்டார்.

அங்கு நடைபெற்ற கேள்வி பதில் அங்கத்தில் பேசிய திரு லீயிடம் பலதரப்பட்ட கேள்விகள் கேட்கப்பட்டன. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் உள்ள உறவு குறித்து திரு லீயிடம் கேள்விகள் முன்வைக்கப்பட்டன.

அதற்கு சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் அடுத்த 20-30 ஆண்டுகளுக்கு எந்த ஒரு சச்சரவும் ஏற்படும் வாய்ப்பில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். இரு நாடுகளுக்கும் உள்ள கிழக்கு மேற்கு எல்லைப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு கிடைக்கும் என்றும் அவர் நம்பவில்லை.

இந்தியத் தொழிற்துறைச் சம்மேளனமும் , சிங்கப்பூரின் தெற்கு ஆசியக் கல்விக் கழகமும் இணைந்து முதல் முறையாக நடத்திய இந்த கருத்தரங்கில் சிங்கப்பூரின் வெற்றிக் கதை மீண்டும் மீண்டும் எதிரொலித்தது.

பக்கம் 2ல் இந்தியாவில் புத்தாக்கப் பல்கலைகள்:
**சிங்கப்பூர்-இந்தியா ஒத்துழைப்பு**

# சிங்கப்பூர் - இந்தியா கூட்டுமுயற்சியில் 14 பல்கலைக்கழகங்கள்

இந்தியாவும் சிங்கப்பூரும் இணைந்து 14 புத்தாக்க பல்கலைக்கழகங்களை இந்தியாவில் அமைக்கவுள்ளதாக இந்திய மனிதவள அமைச்சர் கபில் சிபல் அறித்துள்ளார்.

புதுடெல்லியில் நேற்று நடந்த சிங்கப்பூர் கருத்தரங்கில் பேசியபோது திரு கபில் சிபல் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவின் மாபெரும் திறனாளர் பற்றாக் குறையை ஈடுசெய்ய 21ம் நூற்றாண்டின் அதிநவீன பல்கலைக் கழகங்கள் தேவை. அத்தகைய பல்கலைக் கழகங்களை அமைப்பதில் பங்காளியாகச் செயல்படக் கூடிய சிறந்த நாடு சிங்கப்பூர் என்றார் அவர்.

சிங்கப்பூர் இந்தியாவுக்கு இடையே கட்டுமானம், கல்வி, திறன் மேம்பாடு போன்ற துறைகளில் ஒத்துழைப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் திரு கபில் சிபல் கூறினார்.

இந்தியக் கல்வித் துறையை மறுசீரமைக்க இந்திய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் இதன் பலன் 2014ம் ஆண்டில் தெரிய வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

உலகின் தலைசிறந்த இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம் (ஐஐடி) இந்தியாவுக்கு வெளியே கிளைகளை அமைப்பதில் இந்திய அரசு திறந்த மனதுடன் இருப்பதாகவும் கபில் சிபில் குறிப்பிட்டார்.

சிங்கப்பூரின் தெற்கு ஆசிய கல்விக் கழகமும் இந்திய தொழில்துறைக் கூட்டமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மதியுரை அமைச்சர் லீ குவான் இயூ கலந்துரையாடலில் கலந்துகொண்டார்.

சாலை விபத்தில் நாயுடு மாணம்